# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


பேச்சுப் போட்டி 09-06-2018 ஆண்டு:- மூன்றாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்

### நூல் நிலையம்

மாணவர்களுக்குக் கல்வி அறிவு பள்ளிப் புத்தகங்களால் மட்டும் வந்துவிடாது. பல்வகை நூல்களை அவர்கள் படிக்க வேண்டும். ஆகவே நாம் நூல் நிலையங்களை அணுக வேண்டும்.

நூல் நிலையங்கள் அறிவுக் களஞ்சியங்கள் ஆகும். இவை பல இடங்களில் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை நூல்நிலையங்கள் உண்டு. இங்கு பாட சம்பந்தமான புத்தகங்கள் இருப்பதை நாம் அறிவோம். பல்கலைக்கழக நூல்நிலையங்கள் விலை உயர்ந்த புத்தகங்களை பல மொழிகளில் கொண்டுள்ளன. மாநகராட்சி, உள்ளூராட்சி ஆகியனவும் தம் எல்லைக்கு உட்பட்ட இடங்களில் நூல்நிலையங்களை அமைத்துள்ளன.

நாம் நூல்களை கையாள்வதில் கவனம் செலுத்த வேண்டும். நூல்களைப் படிப்பவரும் பாதுகாப்பவரும் தகுந்த முறையில் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். நாம் நூல்நிலையங்களில் அங்கத்தினராகச் சேர்ந்து பயன்பெற வேண்டும்.

நன்றி
வணக்கம்.